ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2312/47 - 2022 දෙසැම්බර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.29
2312/47 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978(X)(ஆ)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட GL 24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் (உத்தரவாதம்) தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2022, ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதிய 2302/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "வணிக நிர்வாகத்தில் கலாநிதி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் (உத்தரவாதம்) (எஸ்எல்ஐஐரி) ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது-

(அ) குறைந்தபட்சம் 60 திறமை மட்டங்களுடன் (SLQF மட்டம் 10) பூர்த்திசெய்த வலையமைப்புப் பொறியியலில் விஞ்ஞான முதுமானி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்-

(i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட பொறியியலில் விஞ்ஞான இளமானிப் பட்டம் ; அல்லது

1A - PG 6130 — 286 (2022/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ii) இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகத்திலிருந்து (உத்தரவாதம்) லிமிட்டெட்டிடமிருந்து பெறப்பட்ட பொறியியலில் விஞ்ஞான இளமானிப் பட்டம் ; அல்லது

(iii) தொடர்புடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட அனுபவத்துடன் மேலே (i) அல்லது (ii) இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட தகைமைகளுக்கு சமமான தகைமையுள்ள ஏதேனும் உயர் தொழில்சார் பொறியியல், அத்தகைய உயர் தொழில்சார் பொறியியல் தகைமைக்கான ஏற்றங்கீகாரம் மற்றும் துறையின் பொருத்தம் ஆகியவை இயைபான பீடத்தினால் தீர்மானிக்கப்பட்டு இயைபான அமைச்சரவையினால் ஏற்றங்கீகரிக்கப்படும்.

(ஆ) வணிக நிர்வாகத்தில் முதுமானியில், இலங்கை தகைமைக் கட்டமைப்பு II ஆம் மட்டத்தில் (SLQF) பரிந்துரைக்கப்பட்டவாறு பின்வரும் ஆகக்குறைந்த நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(i) குறைந்தபட்சம் 30 திறமை மட்டங்கள் மற்றும் பீடத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட துறை தொடர்பில் ஆய்வுப் புலமைச் சான்றுகளுடனான 0-4.0 வரையிலான அளவீடுகளில் ஆகக்குறைந்தது 3.7 தரச் சராசரிப் புள்ளிகளுடனான SLQF மட்டம் 6 பூர்த்திசெய்த ஏதேனும் துறையில் கௌரவ இளமானி பட்டம்.

(ii) குறைந்தபட்சம் 30 திறமை மட்டங்களுடனான ஏதேனும் துறையில் SLQF மட்டம் 6 இல் கௌரவ இளமானி பட்டம் மற்றும் தகுதிகாண் பரீட்சையில் வெற்றிகரமான பூரணத்துவம்.

(iii) 0-4.0 வரையிலான அளவீடுகளில் 3.0 ஆகக்குறைந்த தரச் சராசரிப் புள்ளியுடன் பூர்த்திசெய்த ஏதேனும் துறையில் SLQF மட்டம் 5 இன் இளமானி பட்டம் மற்றும் அதே துறையில் SLQF மட்டம் 6 இற்கு சமமான 30 திறமை மட்டங்களை பூர்த்திசெய்த பின்னர் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் வெற்றிகரமான பூரணத்துவம்.

(iv) SLQF மட்டம் 7 அல்லது மேலே தொடர்புடைய துறையில் ; அல்லது

(v) 0-4.0 வரையிலான அளவீடுகளில் 3.0 ஆகக்குறைந்த தரச் சராசரிப் புள்ளியுடன் பூர்த்திசெய்த NVQ மட்டம் 7 இல் பூரணத்துவம் மற்றும் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (உத்தரவாதம்) லிமிட்டெட் (எஸ்எல்ஐஐரி) இன் கல்வி அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்டவாறு SLQF மட்டம் 6 அல்லது 7 இற்கு சமமான 30 திறமை மட்டங்களை பூர்த்திசெய்த பின்னர் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் வெற்றிகரமான பூரணத்துவம்.

2. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் (உத்தரவாதம்) லிமிட்டெட் (எஸ்எல்ஐஐரி) ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| **நிரல் I**<br>*பட்டம்* | **நிரல் II**<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| வலையமைப்பு பொறியியலில் விஞ்ஞான முதுமானி | எம்எஸ்சி (வலையமைப்பு பொறியியல்) |
| வணிக நிருவாகத்தில் முதுதத்துவமானி | எம்பில் (வணிக நிருவாகம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, திசெம்பர் 26.

EOG 12-0395

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.